தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர்:03 | இதழ்:245 | 4 பக்கங்கள் | 03:04:2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தாரூ,1825



இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.

**விளக்கம்:**
இரந்துவந்தார்க்கு இலனென்னா நின்ற துன்பத்தைக் கூறாது ஈதலும் குடிப்பிறந்தான்மாட்டே யுளதாம். இது கொடுக்குங்கால் மாறாது கொடுக்க வேண்டுமென்றது.

## மக்கள் சேவையே மகேசன் பணி: அரசு ஊழியர்களுக்குப் பிரதமர் அறிவுரை



புதுடெல்லி: **ஏப்,03** "மக்கள் சேவையே மகேசன் பணி" என்ற கொள்கையுடன் அரசு ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தி உள்ளார்.மத்திய அரசு ஊழியர்களுக்காக 'கர்மயோகி சாதனா சப்தாஹ்' என்ற பெயரில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. இதன்படி ஏப்ரல் 2 முதல் 8-ம் தேதி வரை சிறப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதன் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி வாயிலாக பேசியதாவது: கடந்த பிப்ரவரியில் பிரதமர் அலுவலகத்தை (சேவா தீர்த்) திறந்து வைத்தேன்.அப்போது, "வரும் 2047-க்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு சேவா தீர்த் அலுவலகங்களில் மத்திய அரசு ஊழியர்கள் கால் பதிக்க வேண்டும்" என்று அழைப்பு விடுத்தேன். இப்போதும் அதே கருத்தை முன்வைக்கிறேன். மத்திய அரசு துறைகளில் பணியாற்றும் ஒவ்வொரு ஊழியரும் கர்மயோகியாக செயல்பட வேண்டும்.'மக்கள் சேவையே மகேசன் பணி' என்ற கொள்கையுடன் அரசு ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும். மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு கனவு இருக்கிறது. அதை நிறைவேற்ற அரசு ஊழியர்கள் முழு ஆதரவு அளிக்க வேண்டும். இன்றைய உலகில் தொழில்நுட்பங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்று உள்ளன. கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசின் அனைத்து துறைகளிலும் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளன. ஆட்சி நிர்வாகத்தில் புதிய தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். தற்போது ஆட்சி நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கும் முன்னுரிமை அளித்து வருகிறோம். இதன்மூலம் அரசு நிர்வாகத் திறன் மேலும் மேம்படும்.

## ஆம் ஆத்மி ராகவ் சத்தாவின் மாநிலங்களவை பதவி நீக்கம்



புதுடெல்லி: **ஏப்,03** டெல்லி மதுபான கடைகள் ஒதுக்கீட்டு வழக்கில் கடந்த 2024ம் ஆண்டில் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால் கைது செய்யப்பட்டார். அப்போது ஆம் ஆத்மி சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. இதில் மாநிலங்களவை எம்.பி. யான ராகவ் சத்தா பங்கேற்கவில்லை. கடந்த பிப்ரவரி மாதம் மதுபான ஒதுக்கீட்டு வழக்கில் கேஜ்ரிவால் விடுதலை செய்யப்பட்டார். அப்போதும் ராகவ் சத்தா எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை. ஆம் ஆத்மியின் வெற்றி கொண்டாட்டங்களில் அவர் பங்கேற்கவில்லை.கடந்த 2025ம் ஆண்டு குளிர்கால கூட்டத் தொடர் மற்றும் தற்போதைய பட்ஜெட் கூட்டத் தொடரில் ஆம் ஆத்மி சார்பில் பேச அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. உணவு கலப்படம், விமான நிலையங்களில் அதிக விலைக்கு உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுவது குறித்து அவர் தனது கருத்துகளை முன்வைத்தார். ஆம் ஆத்மி கட்சி சார்பாக அவர் எதுவும் பேசவில்லை.இந்த சூழலில் ஆம் ஆத்மியின் மாநிலங்களவைத் துணைத் தலைவர் பதவியில் இருந்து ராகவ் சத்தா நீக்கப்பட்டு உள்ளார். அவருக்கு பதிலாக புதிய துணைத் தலைவராக அசோக் மிட்டல் நியமிக்கப்பட்டு உள்ளார். இதுதொடர்பாக ஆம் ஆத்மி சார்பில் மாநிலங்களவை செயலாளரிடம் கடிதம் அளிக்கப்பட்டு உள்ளது.

## ஹார்முஸ் ஜலசந்தி முடக்கம்: வளைகுடா நாடுகளுக்கு பெரும் பொருளாதார இழப்பு



மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றத்தால் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளதால், உலகளாவிய எரிசக்தி வினியோகம் பாதிக்கப்பட்டு வளைகுடா நாடுகள் தினசரி ரூ.21,600 கோடிக்கும் மேல் இழப்பை சந்தித்து வருகின்றன. இதில் குறிப்பாக சவுதி அரேபியா ஒரு நாளைக்கு ரூ.9,400 கோடியும், ஐக்கிய அரபு அமீரகம் ரூ.3,290 கோடியும் இழந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சர்வதேச போக்குவரத்து முடக்கம் உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

# நாங்கள் செயலில் காட்டுகிறோம் வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் R. குமார்

**சென்னை:ஏப்,03**
வேளச்சேரி சட்டமன்ற தொகுதியின் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் R.குமார் சென்னை மாநகராட்சி 13 – வது மண்டலமான வேளச்சேரி மண்டல அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார் அப்பொழுது அவர் பேசியதாவது தமிழக வெற்றி கழகம் சார்பில் என்னை வேளச்சேரி சட்டமன்ற வேட்பாளராக நியமிப்பதற்கு



தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் பொதுச் செயலாளர் பூசி ஆனந்த் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார் பின்னர் அவர் கூறியதாவது வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில் நான் வெற்றி பெற்றால் இதற்கு முன்னர் திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு திட்டப் பணிகளை செய்ய தவறிவிட்டது அதை அனைத்தும் நாங்கள் சொல்லாமலே செய்து முடித்து காட்டுவோம் பின்னர் எதுவாக இருந்தாலும் பேசுவோம் செயலில் காட்டிவிட்டு பேட்டி தருவோம் என்று தெரிவித்தார் வேளச்சேரி தாலுகா வேட்பாளர் R. குமார்

## சாத்தான்குளம் வழக்கில் ஏப். 6-ல் தண்டனை: தூக்கு தண்டனை வழங்க சிபிஐ இறுதி வாதம்



**மதுரை: ஏப்,03**
தூத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளத்தில் தந்தை, மகன் கொலை வழக்கில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உட்பட 9 போலீஸாருக்கும் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என இறுதி வாதத்தில் சிபிஐ கேட்டுக்கொண்டுள்ளது. ஜெயராஜ் மனைவி நீதிபதி முன்பு ஆஜராகி 9 பேருக்கும் அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என கண்ணீர் மல்க கேட்டுக் கொண்டார். இதையடுத்து தண்டனை ஏப். 6-ல் அறிவிக்கப்படும் என நீதிபதி தள்ளிவைத்தார். சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் ஜெயராஜ். இவரது மகன் பென்னிக்ஸ். இவர்கள் சாத்தான் குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர்.கடந்த 2020 ஜூன் 19-ல் கரோனா ஊரடங்குக் கட்டுப்பாட்டு நேரம் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாக ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் சாத்தான்குளம் போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.பின்னர் காவல் நிலையத்தில் வைத்து இரவு முழுவதும் போலீஸார் தாக்கியதில் முதலில் பென்னிக்ஸ், அடுத்து ஜெயராஜ் உயிரிழந்தனர். இதையடுத்து சிபிஐ கொலை வழக்குப் பதிவு செய்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோர் கைது செய்யப்பட்டு மதுரை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. விசாரணை முடிந்து 9 பேரும் குற்றவாளிகள் என்றும் தண்டனை விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் நீதிபதி முத்துக்குமரன் உத்தரவிட்டார். இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதி முத்துக்குமரன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. ஸ்ரீதர் உள்ளிட்ட 9 பேரையும் போலீஸார் ஆஜர்படுத்தினர். பின்னர் சிபிஐ வழக்கறிஞர் விஜயன் வாதிடுகையில், குற்றம் நிரூபிக்கப்பட்டதால் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். தூக்குத் தண்டனை, இரட்டை ஆயுள் போன்ற அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். அரிதினும் அரிதான காவல் கொடூர மரண வழக்குகளில் தூக்குத் தண்டனை வழங்கலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் இன்று முதல் வழக்கமான மின்சார ரயில் சேவை



**சென்னை: ஏப்,03**
சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் 10, 11-வது நடைமேடைகளில் நடைபெற்று வந்த மேம்பாலப் பணி முடிந்துள்ளதால், கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் இன்று முதல் வழக்கமான கால அட்டவணைப் படி, மின்சார ரயில்கள் இயக்கப்படும் என, சென்னை ரயில்வே கோட்டம் அறிவித்துள்ளது.

சென்னை, எழும்பூர் ரயில் நிலையத்தில், ரூ.734.91 கோடியில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, பிரம்மாண்ட நடைமேம்பாலம் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

இந்த ரயில் நிலையத்தின் 10, 11-வது நடைமேடைகளில் இதற்கான பணிகள் தொடங்கியதால், கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில், கடந்த பிப்.19-ம் தேதி முதல், 44 மின்சார ரயில்களின் சேவை ரத்து செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 45 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

அதாவது, 204 ரயில் சேவைகளில் இருந்து 115 சேவைகளாக குறைக்கப்பட்டன. இதுதவிர, தற்காலிக கால அட்டவணை அமைத்து, 20 நிமிடத்துக்கு ஒரு மின்சார ரயில் இயக்கப்பட்டன.

இந்நிலையில், நடைமேடை 10, 11-ல் ஏப்.5-ம் தேதியில் முடிக்க வேண்டிய மேம்பாலம் அமைக்கும் பணிகளை முன்கூட்டியே முடித்துள்ளதால், இன்று (3-ம் தேதி) முதல் வழக்கமானகாலஅட்டவணைப் படி மின்சார ரயில் சேவை மீண்டும் இயக்கப்படுகிறது.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறுகையில், எழும்பூர் ரயில் நிலையத்தில், 10, 11-வது நடைமேடையில் நடைமேம்பாலம் அமைக்கும் பணிகள் பிப். 19-ம் தேதி தொடங்கப்பட்டது. இப்பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளது.

இதையடுத்து, வெள்ளிக்கிழமை (இன்று) முதல் வழக்கமான பழைய கால அட்டவணைப்படி மின்சாரரயில்கள்இயக்கப்படும். வார நாட்களில் 212 மின்சார ரயில் சேவைகளும், ஞாயிறுக்கிழமைகளில் 189 மின்சார ரயில் சேவைகளும் இயக்கப்படும் என்றனர்.

## மாநகர வாக்குச்சாவடிகள் போலீஸ் கமிஷனர் ஆய்வு



**மதுரை: ஏப்,03**
மாநகர காவல்துறை சார்பில் சட்டமன்ற தேர்தல் பாதுகாப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, மதுரை தெற்கு மற்றும் மேற்கு தொகுதிகளில் அமைக்கப்படவுள்ள 6க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் நேரில் பார்வையிட்டார். விளக்குத்தூண் அவ்வை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சுப்பிரமணியபுரம் கம்பர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, ஈ. வே. ரா நாகம்மை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்ட அவர், அங்கு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

## சிறுவர்கள், இளைஞர்கள் உயிரிழப்புக்கு காரணமாகும் புற்றுநோய்



'தி லான்செட்' மருத்துவ இதழ் வெளியிட்ட 2023-ம் ஆண்டின் உலகளாவிய நோய்கள் சுமை குறித்த ஆய்வின்படி, இந்தியாவில் 5 முதல் 19 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் உயிரிழப்புக்கான முதல் 10 காரணங்களில் புற்றுநோயும் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக, இந்தியச் சிறுவர்களிடையே ரத்தப் புற்றுநோய், மூளைக்கட்டிகள் மற்றும் நிணநீர் சுரப்பி புற்றுநோய் ஆகியவை அதிகம் காணப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தின் புதிய டிஜிபியாக சந்தீப் ராய் ரத்தோரை நியமித்தது தேர்தல் ஆணையம்.



**சென்னை: ஏப்,03**
தமிழக காவல்துறையின் சட்டம் ஒழுங்கு டிஜிபியாக சந்தீப் ராய் ரத்தோரை நியமித்து தலைமை தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அவர் உடனடியாக பொறுப்பேற்றார். தாம்பரம், மதுரை காவல் ஆணையர்கள், தூத்துக்குடி, சேலம் மாவட்ட ஆட்சியர்களும் மாற்றப்பட்டுள்ளனர்.தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியானது. அன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. தமிழகம் முழுவதும் தொகுதி வாரியாக பறக்கும் படைகள், நிலைக்கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர, தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 250 கம்பெனி துணை ராணுவப் படையினரை தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ளது. இதையடுத்து, பல்வேறு மாநிலங்களில் இருந்து துணை ராணுவப் படையினர் தமிழகத்துக்கு வந்துகொண்டிருக்கின்றனர். இதற்கிடையே, தேர்தல் அறிவிக்கை கடந்த மார்ச் 30-ம் தேதி வெளியிடப்பட்டு, அன்று முதல் வேட்புமனுத் தாக்கல் தொடங்கியுள்ளது. மனுத் தாக்கல் செய்த வேட்பாளர்கள் தங்களது தொகுதிகளில் பிரச்சாரத்தையும் தொடங்கினர். அந்த வகையில், சில நாட்களுக்கு முன்பு, சென்னை பெரம்பூர் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்த தவெக தலைவர் விஜய், அங்கு பிரச்சாரத்தையும் தொடங்கினார். அனுமதி பெறப்பட்ட 4 இடங்களில் 2 இடங்களில் மட்டுமே பிரச்சாரம் செய்தார்.

தினகனி



### ஈரோடு

# எஸ் எஸ் பி நகரில் மகா மாரியம்மன் கோவில் பொங்கல் விழா

ஈரோடு ஏப் 3

ஈரோடு எஸ் எஸ் பி நகரில் உள்ள மகா மாரியம்மன் கோவிலில் பொங்கல் விழா கடந்த 31 ந் தேதி பூச்சாட்டு விழாவுடன் தொடங்கியது. வருகிற 7 ந் தேதி தீர்த்தம் கொண்டு வரும் நிகழ்ச்சியும் 8 ந் தேதி பொங்கல் விழா மற்றும் அலகு குத்தி வருதல் அக்னி சட்டி எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடக்கிறது .அன்று மாலை மாவிளக்கு எடுக்கப்படுகிறது. 9 ம் தேதி காலை கம்பு பிடுங்கும் நிகழ்ச்சியும் அன்று மாலை மஞ்சள் நீராட்டு விழா மற்றும் அம்மன் திருவீதி ஊர்வலம் நிகழ்ச்சியும் நடக்கிறது .10 ந் தேதி காலை மறு பூஜையுடன் விழா முடிகிறது . இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்து வருகிறார்கள்.

### தருமபுரி நகர அமமுக சார்பில்

# தருமபுரி சட்டமன்ற வேட்பாளர் சௌமியா அன்புமணி அறிமுகம் கூட்டம்



தருமபுரி ஏப்ரல் 03

தருமபுரி நகர அமமுக சார்பில் நிர்வாகிகளுக்கு தேசிய ஜனநாயககூட்டணியின்தருமபுரிசட்டமன்றவேட்பாளர் அறிமுகம் கூட்டம் நகர கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்டவேட்பாளர் சௌமியா அன்புமணிக்கு கும்ப மரியாதை வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நிர்வாகிகளிடம் சட்டமன்ற தேர்தலில் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டார். இந்த கூட்டத்தில் பாமக மாவட்ட செயலாளர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், அ ம மு க மாவட்ட செயலாளர் டி. கே. ராஜேந்திரன், நகர செயலாளர் பார்த்திபன் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

### தருமபுரி நகர பிஜேபி சார்பில்

# தருமபுரி சட்டமன்ற வேட்பாளர் சௌமியா அன்புமணி அறிமுகம் கூட்டம்



தருமபுரி ஏப்ரல் 03

தருமபுரி நகர பிஜேபி சார்பில் நிர்வாகிகளுக்கு தேசிய ஜனநாயக கூட்டணியின் தருமபுரி சட்டமன்ற வேட்பாளர் அறிமுகம் கூட்டம் நகர கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட வேட்பாளர் சௌமியா அன்புமணிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நிர்வாகிகளிடம் சட்டமன்ற தேர்தலில் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டார். இந்த கூட்டத்தில் பாமக மாவட்ட செயலாளர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், பிஜேபி மாவட்ட தலைவர் சரவணன், நகரதலைவர்சாய் ஆறுமுகம், ஓ பி சி அணியின் மாவட்ட தலைவர் சசிகுமார் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### நாகர்கோவிலில்

# தேர்தல் பிரச்சாரக் கூட்டம்

## முதல்வர் இன்று குமரி வருகிறார்

நாகர்கோவில், ஏப். 3

சட்டமன்றத் தேர்தலை ஒட்டி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு க ஸ்டாலின் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்திற்காக இன்று 3ம் தேதி இரவு குமரி மாவட்டத்திற்கு வருகிறார்.

நெல்லை மாவட்டத்தில் பிரச்சாரம் முடித்துவிட்டு கார் மூலம் கன்னியாகுமரிக்கு வரும் அவர் தனியார் தங்கும் விடுதியில் இன்று இரவு ஓய்வெடுக்கிறார். தொடர்ந்து நாளை 4 ம் தேதி நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு பிரம்மாண்டமான தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேறுகிறார்.

இந்த கூட்டத்தில் கன்னியாகுமரி தொகுதி திமுக வேட்பாளர் மகேஷ், நாகர்கோவில் தொகுதி திமுக வேட்பாளர் ஆஸ்டின், பத்மநாபபுரம் தொகுதி மார்க்சிஸ்ட் வேட்பாளர் செல்லசுவாமி உட்பட மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் பேச உள்ளார்.

இந்த பொதுக்கூட்டத்தில் திமுக கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களும் பங்கேற்கின்றனர். இந்த கூட்டத்திற்கான மேடை அமைக்கும் பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தற்போது ஸ்கார்ட் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. பொதுக் கூட்டத்தை முடித்துவிட்டு அன்று மாலை 5 மணிக்கு முதல்வர் சங்கரன்கோவில் செல்கிறார்.

# கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 100% வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு பேரணி



ஈரோடு, ஏப். 3

ஈரோடு, கொங்கு கலை மற்றும் அறிவியல்கல்லூரியில் தேர்தல் எழுத்தறிவு மன்றம்,என்.சி.சி,என்.எஸ்.எஸ், ஒய்.ஆர்.சி, மற்றும் ஆர் ஆர் . சிபிரிவுகளுடன் இணைந்து, 100% வாக்காளர்பங்கேற்பை ஊக்குவிக்கும்விழிப்புணர்வுநிகழ்ச்சியைதிங்களன்றுஏற்பாடுசெய்தது.

ஈரோடுமேற்குதுணை ஆட்சியரும்வருவாய்கோட்டஅலுவலருமான செல்வி சிந்துஜா இப்பேரணியைத் தொடங்கிவைத்தார். அவர், மாணவர்களும்பொதுமக்களும்தங்களதுவாக்குரிமையைப்பொறுப்புடன்பயன்படுத்தி, ஜனநாயகத்தை வலுப்படுத்தப் பங்களிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

வட்டாட்சியர், கிராமநிர்வாகஅலுவலர் (வி.ஏ.ஓ), மற்றும்வருவாய் ஆய்வாளர் (ஆர்.ஐ) உள்ளிட்ட, முறைப்படுத்தப்பட்டவாக்காளர்கல்வி மற்றும்தேர்தல்பங்கேற்பு (எஸ்.வி.இ.இ.பி) திட்டத்துடன் தொடர்புடைய அதிகாரிகளும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சி கையெழுத்து இயக்கத்துடன் தொடங்கியது. அதனைத்தொடர்ந்து, 100% வாக்காளர் பங்கேற்பின்அவசியத்தைவலியுறுத்தும்உறுதிமொழிஎடுக்கப்பட்டது. கல்லூரிவளாகத்தில் இருந்து தொடங்கிய பேரணி, குமரன் பூங்கா வழியாகச் சென்று பாவலத்தாம்பாளையத்தில் நிறைவடைந்தது.

மாணவர்கள், வாக்களிப்பு மற்றும் தேர்தல் பங்கேற்பின் முக்கியத் துவத்தைஎடுத்துரைக்கும்செய்திகள் அடங்கியபதாகைகளைஏந்தியபடி உற்சாகமாகப்பங்கேற்றனர்.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்படமொத்தம் 245 பேர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். நிறுவனத்தின் தாளாளர் பி. சச்சிதானந்தன் மற்றும் முதல்வர் டாக்டர்எச். வாசுதேவன் ஆகியோர் மாணவர்களின் முயற்சிகளைப்பாராட்டியதோடு, ஜனநாயக விழுமியங்களை வளர்ப்பதில் இளைஞர்களின் பங்கையும்வலியுறுத்தினர். சமூகத்தில் தேர்தல் விழிப்புணர்வை மேம்படுத்து வதற்கான ஒரு புதுப்பிக்கப் பட்ட உறுதிமொழியுடன் இந்நிகழ்ச்சி நிறைவடைந்தது.

# 100% வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்



காஞ்சிபுரம், ஏப். 3

இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பினை தொடர்ந்து, நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026னை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்ட சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து வாக்காளர்களுக்கும் முறையான கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்புத் திட்டம் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் 100% வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு 100% வாக்களிப்போம் என்ற தேர்தல் உறுதி மொழி எடுத்தல், பேனர்கள், போஸ்டர்கள், ஸ்டிக்கர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் கொடுத்து பிரச்சாரம் செய்தல், தேர்தல் விழிப்புணர்வு பேரணி நடத்துதல், அரசு களப்பணியாளர்களை கொண்டு பொதுமக்களின் வீட்டிற்கே சென்று துண்டு பிரசுரங்கள் வழங்குதல், மகளிர்சுய உதவி குழுக்களை கொண்டு கோலப் போட்டிகள் நடத்துதல், பள்ளி மாணவ/மாணவியர்கள் பேரணி நடத்துதல் போன்றவற்றின் மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனை தொடர்ந்து இன்று மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அய்யப்பன் தாங்கல் ஊராட்சியில் 100 சதவீதம் வாக்கு பதிவு செய்வதை உறுதிசெய்திடும் பொருட்டு காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிவாக்காளர் பதிவு அலுவலர் / மாநகராட்சி மண்டல அலுவலர் ஆகியோர் விழிப்புணர்வு பேரணி தொடங்கி வைத்து செல்பி பாயிண்டு மூலம் பொதுமக்களுடன் புகைப்படம் எடுத்து கொண்டனர். தொடர்ந்து தேர்தல் விழிப்புணர்வு வாக்காளர் உறுதி மொழி கையொப்பம் பதாகையில் கையொப்பம் இட்டு தொடங்கி வைத்தார்கள்.

மேலும் கிராமிய கலைஞர்களை கொண்டு மயிலாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், நாதஸ்வரம் இசை நிகழ்ச்சியுடன் விளம்பர பதாகைகள் ஏந்தியவாறு தூய்மை காவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களை கொண்டு 40 மின்கல வண்டி மூலம் பேரணி நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் 30 பேர் பேரணியில் பங்கேற்றனர் மேலும், விழிப்புணர்வு வாசகங்கள் பொறித்த தொகுப்பு பாலூன்கள் பறக்கவிடப்பட்டது. வாக்காளர்கள் அனைவரும் தவறமால் 100 சதவீதம் வாக்கு அளித்திட விழிப்புணர்வு வண்ண கோலங்கள் மற்றும் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட விழிப்புணர்வு சின்னம் வரையப்பட்டது.

நிகழச்சியில் தொடர்ந்து தேர்தல் திருவிழா அழைப்பிதழை வீடு வீடாக சென்று வெற்றிலை, பாக்கு, பூ, வாழைப்பழம் மற்றும் இனிப்பு முதலியனவற்றை தாம்பூல தட்டில் வைத்து பொதுமக்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர் / மாநகராட்சி மண்டல அலுவலர் ஆகியோர் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுத்தினர். இந்நிகழ்விற்கு முன்னதாக காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஊராட்சியில் உள்ள மின்கல வண்டிகளில் 100% வாக்கு அளித்திடும் பொருட்டு விளம்பர வில்லைகள் ஒட்டப்பட்டு பலூன்கள் தொங்கவிட்டும், வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் தேர்தல் விழிப்புணர்வு விளம்பர பாடல் ஒளிபரப்பு செய்யப்பட்டன. மேலும் தூய்மை காவலர்கள், சுகாதரா ஊக்குநர்கள், மக்கள் நல பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்து கொண்டு, விழிப்புணர்வு கையொழுத்து பதாகையில் அனைவரும் வாக்களிப்போம் என உறுதி ஏற்று கையெழுத்துஇட்டனர்.

பின்பு உதவி திட்ட அலுவலர்கள் தலைமையில் சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சியில் உள்ள வீடுகளுக்கு மேளதாளங்கள் முழங்க வெற்றிலை பாக்கு பழங்களுடன் தாம்பூலம் வழங்கி வாக்காளர்களை தேர்தலுக்கு வாக்களிக்க வரவேற்று தாம்பூலம் வழங்கப்பட்டது. 30க்கும் மேற்பட்ட மின்கல வண்டிகளில் அனைவரும் பங்கேற்கும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் உதவி திட்ட அலுவலர்கள், மண்டல அலுவலர் வட்டார வளர்ச்சி அலுவலர், அலுவலக பணியாளர்கள், மக்கள் நல பணியாளர்கள், சுகாதரா ஊக்குநர்கள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள், தூய்மை காவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் சோனா அறிவியல் கல்லூரியின் 9 வது ஆண்டு விழா




சேலம் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஒன்பதாவது ஆண்டு விழா கல்லூரியின் ரீ வள்ளியப்பா கலையரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

பெருமைமிக்க சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி சாதனைகளை வெளிப்படுத்தும் விதமாக நடைபெற்ற இந்த ஆண்டு விழாவிற்கு கல்லூரியின் துணைத் தலைவர்கள் சொக்கு வள்ளியப்பா, தியாகு வள்ளியப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் தலைவர் ரீ வள்ளியப்பா தலைமையேற்று சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆண்டு விழா கொண்டாட்டங்களைத் துவக்கி வைத்தார்.

அனைவரையும் வரவேற்ற கல்லூரியின் முதல்வர் காதர் நவாஸ் மாணவர்களின் சாதனைகள் அடங்கிய படத்தொகுப்புடன் கூடிய ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

கல்லூரியின் துறை சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் பேராசிரியர்களின் ஆராய்ச்சிகள் பங்களிப்பு மாணவர்களின் ஆராய்ச்சிகள், விளையாட்டுகள் மற்றும் பிற துறைகளில் சாதனைகள் என கல்லூரியின் சாதனைகளைப் பட்டியலிட்டார். கே . ஆர் சேகர்சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

மேலும் கல்வியில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு ரூபாய் 4,35,000 வழங்கப்பட்டது. கல்வியாண்டில் கல்வியில் முன்னிலை வகித்து படித்து முடித்து வெளியேறிய சிறந்த மாணவர்களுக்கு ரூபாய் 100000 வழங்கப்பட்டது. விளையாட்டு துறையில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு ஒரு பருவ கட்டணமாக தலா 37,000 வீதம் ரூபாய் 2,12,000 வழங்கி கௌரவிக்கப்பட்டது. கல்லூரியில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூபாய் 30,000 , சிறந்த நாட்டு நலப்பணி திட்டம் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் செஞ்சூருள் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ரூபாய் 11000, மாணவர்களில் சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில பேச்சாளர்களுக்கு ரூபாய் 10,000, தொடர்ந்து நூலகத்தை நன்முறையில் பயன்படுத்திய மாணவர்களுக்கு 2000 மதிப்புள்ள புத்தகமும்வழங்கப்பட்டது. பொருளாராதார அளவில் பின்தங்கிய மாணவர்களுக்கு நிர்வாக உதவித் தொகையாக ரூபாய் 4,35,000 மற்றும் பல்கலைக்கழக அளவில் மாணவர்களைத் தரவரிசையில் இடம்பெறச் செய்த துறைகளுக்கு ரூபாய் 300,000 வழங்கி சிறப்பித்தனர்.

மாணவர்களின் மருத்துவத்திற்காக ரூபாய் 35,0000 என்று ஏறத்தாழ ரூபாய் 15,00,000 கல்லூரியின் நிர்வாகத்தின் சார்பாக மாணவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. தமிழ்த்துறை சார்பாக எழுதப்பட்டுள்ள 'பக்தியும் தமிழும் ( சைவம்)' என்ற ஆய்வு நூலைத் தலைவர் சொ. வள்ளியப்பா வெளியிட தமிழ்த்துறை தலைவர் முனைவர் க.விஜயராகவன் பெற்றுக்கொண்டார்.

இந்த விழாவில் சோனா கல்வி நிறுவனத்தின் முதல்வர்கள் கனகராஜ், செந்தில்குமார், கவிதா ,பேராசிரியர்கள் மற்றும் ஏராளமான மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

உளவியல் துறைத் தலைவர் ஷீனா மேத்யூ நன்றி உரை ஆற்றினார்



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, பல்லடம் சாலை, திருப்பூர் கூட்டுறவு விற்பனை சங்க நியாய விலைக்கடையில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துணி பைகளில் அத்தியாவசிய பொருள்களை பொதுமக்களுக்கு வழங்கினார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பிரபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பெட்ரோல் ஸ்கூட்டர் விழிப்புணர்வு பேரணி



தஞ்சாவூர், ஏப். 3

தஞ்சாவூர் மாவட்டம் அருங்காட்சியக வளாகத்தில் தஞ்சாவூர் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு 100% வாக்களிப்பதனை உறுதி செய்யும் பொருட்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் விழிப்புணர்வு பேரணியில் சுமார் 150க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தி "தேர்தல் திருவிழா தமிழ் நாட்டின் பெருவிழா" என்ற கருத்தினை மையமாகக் கொண்டு மேம்பாலம் வழியாக அன்னை சத்யா விளையாட்டு அரங்கம் வரை சென்று வாக்களிப்பதன் முக்கியத்துத்தினை உணர்த்தும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், சமூக பாதுகாப்புத்திட்ட தனித் துணை ஆட்சியர் சௌமியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன், வட்டாட்சியர் சிவக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 போலீசாருக்கும் தூக்கு தண்டனை கொடுங்க !

## சாத்தான்குளம் கொலை வழக்கில் சி.பி.ஐ. வாதம்

சென்னை, ஏப். 3

தமிழகத்தையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய சாத்தான்குளம் ஜெயராஜ், பென்னிக்ஸ் கொலை வழக்கில் 9 பேரின் தண்டனை விவரம் அறிவிப்பு ஏப்ரல் 6ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப் பட்ட 9 காவலர்களும் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மார்ச் 27 ஆம் தேதி அனுமதிக்கப் பட்டனர்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் வணிகர் ஜெயராஜ் (58). இவரது மகன் பென்னிக்ஸ் (31). இவர்கள் இருவரும் அதே பகுதியில் கைப்பேசி விற்பனை, பழுது நீக்கும் கடை நடத்தி வந்தனர். கடந்த 2020ஆம் ஆண்டு, ஜூன் மாதம் கொரோனா பொது முடக்கம் அமலில் இருந்த போது, கைப்பேசி கடையை ஜெயராஜ் அரசு அனுமதித்த நேரத்தைவிட தாமதமாக மூடியதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து, ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் காவல் துறையினர் விசாரணைக்கு அழைத்துச் சென்று தாக்கியதில் இருவரும் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக அப்போதைய காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பால கிருஷ்ணன், ரகு கணேஷ், பால்துரை, காவலர்கள் முருகன், முத்துராஜ், சாமிதுரை, செல்லதுரை, வெயிலுமுத்து, தாமஸ் ஆகிய 10 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் உதவி ஆய்வாளர் பால்துரை உடல் நலக் குறைவால் உயிரிழந்தார்.

எனவே, அவரை வழக்கிலிருந்து விடுவித்த நிலையில், எஞ்சிய 9 பேரும் சிறையில் உள்ளனர். சிபிசிஐடி விசாரித்து வந்த இந்த வழக்கு சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது.

மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கு, நீதிபதி முத்துக்குமரன் முன் கடந்த 23 ஆம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, வணிகர்கள் ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் மீது போலீஸார் பதிந்த வழக்கு பொய்யானது என தெரியவருகிறது. இந்த வழக்கைப் பொருத்தவரை, சிபிஐ தரப்பு முன்வைத்த குற்றச்சாட்டுகள் உண்மை என்பதை நீதிமன்றம் உறுதி செய்கிறது.

மேலும், அனைத்துத் தரப்பு வாதங்களை வைத்து பார்க்கும் போது, இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் குற்றவாளிகள் என இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

கைது செய்யப்பட்ட நபர்கள் சிறையில் உள்ள காலத்தை கருத்தில் கொண்டு, அவர்களது மனநிலை எந்தளவு உள்ளது என்பதை உளவியல் நிபுணர்கள் மூலம் ஆய்வு செய்து, அறிக்கையாக நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்ய வேண்டும். வழக்கு விசாரணை வருகிற 30ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றார் நீதிபதி. இந்த நிலையில், குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்ட 9 பேருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று சிபிஐ தரப்பில் வாதாடப்பட்ட நிலையில், தண்டனை விவரம் அறிவிப்பை ஏப்ரல் 6ஆம் தேதி ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக, குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை வழங்க வேண்டும் என மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சிபிஐ தரப்பு வாதம் செய்தது. நீதிபதி முத்துக்குமரன் முன்பாக ஜெயராஜின் மனைவி செல்வராணி, மகள் பெர்சி ஆகியோர் ஆஜராகி தங்களது தரப்பு வாதங்களையும் முன்வைத்தனர்.

# ஈரான் - அமெரிக்க போர் எதிரொலி ஜூன் 30-ம் தேதி வரை வரி விலக்கு அறிவிப்பு

ஈரான், ஜூன் 3

ஈரான் நாட்டின் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கடந்த பிப்ரவரி மாதம் 28ம் தேதி போரை துவங்கிய நிலையில் ஒரு மாதத்திற்கு மேல் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதில் ஈரான் மற்றும் இஸ்ரேல் இரண்டு நாடுகலிலும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இஸ்ரேல் தாக்கியதில் ஈரானின் முக்கிய தலைவர் கமேனி குடும்பத்தோடு கொல்லப்பட்டார்.

இதையடுத்து அமெரிக்காவுக்கு உதவி செய்யும் வளைகுடா நாடுகளான அபுதாபி, பஹ்ரைன், சவுதி அரேபியா, துபாய் போன்ற வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத்தளங்களை குறிவைத்து ட்ரோன் தாக்குதலை நடத்தி வருகிறது.

இதன் காரணமாக உலகெங்கும் கச்சா எண்ணெய் செல்வது தடைப்பட்டிருக்கிறது. ஏனெனில் இந்தியா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட கச்சா எண்ணையை வளைகுடா நாடுகளில் இருந்துதான் வாங்குகிறது. தற்போது கச்சா எண்ணெய் கிடைக்காததால் இந்தியாவில் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் ஹோட்டல்களை மூடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. வணிக சிலிண்டர் சிலிண்டர் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுவிட்டது.

இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் பாதுகாப்பு கவுன்சில் அவசரக்கூட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து மத்திய கிழக்கு போரால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க 41 பெட்ரோல் கெமிக்கல் பொருட்களுக்கான இறக்குமதி வரியை ஜூன் 30ம் தேதி வரை ரத்து செய்வதாக பாஜக அரசு அறிவித்திருக்கிறது.

இதன்மூலம் பிளாஸ்டிக், பேக்கேஜிங், ஜவுளி, மருந்துகள், வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் துறைகள் பெருமளவில் பயனடையும் என்றும் நாட்டில் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# கமுதி அருகே இலந்தைகுளம் கிராமத்தில் வீரப்பெருமாள் சாஸ்தா பங்குனி உத்திர திருவிழா



கமுதி ஏப்.3

இராமநாதபுரம் மாவட்டம் இலந்தைகுளம் கிராமத்தில் ஸ்ரீ வீரப் பெருமாள் சாஸ்தா மற்றும் 21 பரிவார தெய்வங்களுக்கு மூன்றாம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழா நடைபெற்றது.

விழாவை முன்னிட்டு பக்தர்கள், குலதெய்வ பங்காளிகள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு, மாலையாட்டு நிகழ்வில் பொதுப் பொங்கல் வைத்து சிறப்பு பூஜைகள் செய்தனர். விநாயகர் கோவிலில் இருந்து பால்குடம் எடுத்துச் சென்று பால் உள்ளிட்ட 7 வகையான அபிஷேகங்கள் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

ஸ்ரீ வீரப்பெருமாள் சாஸ்தா, ஸ்ரீ அரியநாச்சி அம்மன் ராஜ அலங்காரத்தில் எழுந்தருளி தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து கிடா வெட்டுதல், திரி மற்றும் அக்னிச்சட்டி ஊர்வலம், கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும், ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பணசாமிக்கு 108 வகையான படையலுடன் பூஜைகள் செய்து, கிடா வெட்டுதல் மற்றும் கருப்பசாமி வேடம் பூண்டு குறி சொல்லும் நிகழ்வும் நடைபெற்றது.

விழா முழுவதும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த திருவிழா இலந்தைகுளம் ஸ்ரீ வீரப்பெருமாள் சாஸ்தா விழாக்குழு சார்பில் சிறப்பாக நடத்தப்பட்டது.

# 4 விண்வெளி வீரர்களுடன் நிலவுக்கு சென்ற விண்கலம் 53 ஆண்டுகளுக்கு பிறகு நாசாவின் மெகாதிட்டம் தொடக்கம்



அமெரிக்கா, ஏப். 3

அமெரிக்காவும் ரஷியாவும் கடந்த நூற்றாண்டில் நிலவு குறித்த ஆய்வுகளில் தீவிரமாகப் போட்டியிட்டு மனிதர்களை நிலவுக்கு அனுப்பிப் பல்வேறு சாதனைகளைப் படைத்தன.

இருப்பினும், கடந்த சில தசாப்தங்களாக இரு நாடுகளும் நிலவு குறித்த நேரடி ஆய்வுகளைக் கைவிட்டிருந்த நிலையில், தற்போது 53 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் பிரம்மாண்டமான பணியை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா கையில் எடுத்துள்ளது.

விண்வெளி ஆய்வில் ஒரு புதிய மைல்கல்லாகப் பார்க்கப்படும் இந்தத் திட்டம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. நாசாவின் இந்த 'ஆர்டெமிஸ் 2' திட்டமானது வெறும் நிலவுப் பயணத்துடன் நின்றுவிடாமல், எதிர்காலத்தில் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்புவதற்கான ஒரு முன்னோடிப் பயிற்சி மையமாக நிலவைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. நிலவில் உள்ள கனிம வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் அங்கு மனிதர்கள் தங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக 3 அமெரிக்க விண்வெளி வீரர்கள் மற்றும் ஒரு கனடா விண்வெளி வீரர் என மொத்தம் 4 பேர் கொண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அதிசக்தி வாய்ந்த எஸ்.எல்.எஸ் ராக்கெட் மூலம் நாசாவின் 'ஓரியன்' விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது. இந்த விண்கலத்தில் பயணிக்கும் நான்கு வீரர்களும் நிலவின் இதுவரையிலும் மனிதர்கள் கால் தடம் பதிக்காத, சென்றிராதப் பகுதிகளுக்குச் சென்று விரிவான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளனர். விண்வெளி வீரர்களின் பாதுகாப்பு மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் ஏவப்பட்டுள்ள இந்த விண்கலம், நிலவு குறித்த மர்மங்களை விடுவிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விண்வெளிப் பயண வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது.



விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் எரிவாயு உருளை பயன்பாடு தொடர்பாக உணவக உரிமையாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ் உட்பட பலர் உள்ளனர்.

# காங்கிரஸ் வேட்பாளர்கள் உத்தேச பட்டியல் வெளியீடு

2026 சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ்க்கு 28 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ் உத்தேச வேட்பாளர் பட்டியல் குமரி மாவட்டம்1 1.கிள்ளியூர் ராஜேஷ் குமார் 2. விளவங்கோடு தாரகை கத்பார்ட் 3.குளச்சல் பிரின்ஸ்/ லாரன்ஸ்/ பினு லால் நெல்லை மாவட்டம் 2 4.நாங்குநேரி காமராஜ்/ ரூபி மனோகரன் 5.அம்பாசமுத்திரம் காமராஜ்/வி.பி.துரை தூத்துக்குடி மாவட்டம்3 6.ஸ்ரீவைகுண்டம் ஊர்வசி அமிர்தராஜ் தென்காசி மாவட்டம்4 7.சங்கரன்கோவில்(தனி) வெள்ளபாண்டி/ பாக்கியராஜ் விருதுநகர் மாவட்டம்5 8.சிவகாசி அசோகன்/ சொக்கர் இராமநாதபுரம் மாவட்டம்6 9.திருவாடானை கரு மாணிக்கம் சிவகங்கை மாவட்டம்7 10.காரைக்குடி மாங்குடி மதுரை மாவட்டம்8 11.மேலூர் கார்த்திகேயன்/ ரவிச்சந்திரன் 12.உசிலம்பட்டி ராஜா முஹம்மது/ கார்த்திகேயன் திருச்சி மாவட்டம்9 13.துறையூர் (தனி) லெனின் பிரசாத் புதுக்கோட்டை மாவட்டம்10 14.அறந்தாங்கி ராமச்சந்திரன் மயிலாடுதுறை மாவட்டம்11 15. மயிலாடுதுறை ராஜ்குமார் கடலூர் மாவட்டம்12 16.கடலூர் ராஜேந்திரன்/ ராதா கிருஷ்ணன் சேலம் மாவட்டம்13

17. ஆத்தூர் அர்த்தநாரி ஈரோடு மாவட்டம்14 18.ஈரோடு கிழக்கு மக்கள் ராஜன் / சஞ்சய் கோவை மாவட்டம்15 19. சிங்காநல்லூர் மயூரா ஜெயக்குமார்/ சக்திவேல் கவுண்டர் 20. கவுண்டம்பாளையம் மனோகர்/சக்திவேல் கவுண்டர் நீலகிரி மாவட்டம்16

21.ஊட்டி கணேஷ்/ நரேஷ் சந்திரன் தருமபுரி மாவட்டம்17 22.பென்னாகரம் சுமதி அன்பரசு/தமிழ் குமரன் கிருஷ்ணகிரி மாவட்டம்18 23. கிருஷ்ணகிரி செல்லக்குமார் 24.ஊத்தங்கரை (தனி) குப்புசாமி/ஆறுமுகம் இராணிப்பேட்டை மாவட்டம்19 25.சோளிங்கர் முனிரத்னம்/ பொன்னம்பலம் காஞ்சிபுரம் மாவட்டம்20 26.ஸ்ரீ பெரும்புதூர் (தனி) செல்வப்பெருந்தகை திருவள்ளூர் மாவட்டம்21 27.பொன்னேரி (தனி) துரை/இமயா கக்கன்/ ரஞ்சன்குமார் சென்னை மாவட்டம்22 28.வேளச்சேரி அசன் / ஹசீனா சையத் மொத்தமுள்ள 38 மாவட்டங்களில் 16 மாவட்டங்களில் காங்கிரஸ் போட்டியிடவில்லை.

## ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதியில்

# போட்டியிட கூடை நிறைய ஐந்து ரூபாய் நாணயங்களை கொண்டு வந்து டெபாசிட் செலுத்தி வேட்புமனு தாக்கல் செய்த சுயேட்சை வேட்பாளர்




திருப்பத்தூர்:ஏப்:3

திருப்பத்தூர் மாவட்டத்தில் வேட்பு மனு தாக்கல் செய்து வரும் நிலையில் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி சுயேட்சை வேட்பாளர் மோகன்ராஜ் நாட்றம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். நாட்றம்பள்ளி அடுத்த சுண்ணாம்பு க்குட்டை பகுதியினைச் சேர்ந்த இவர், தேர்தல் வேட்பு மனுவிற்கான டெபாசிட் தொகையான ஐந்தாயிரம் ரூபாயினை ஐந்து ரூபாய் நாணயங்களாக பூ கூடையில் கொண்டு வந்து வழங்கினார். ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி தேர்தல் அலுவலர் முருகேசன் வேட்புமனுவினை பெற்றுக்கொண்டார். ஐந்தாயிரம் ரூபாய்க்கு சில்லறைய கொண்டு வந்து வழங்கியதால் அலுவலகத்தில் சுவாரசியமாக இருந்தது.

# தங்கம் விலை அதிரடி சரிவு ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2400 குறைந்தது

சென்னை, ஏப். 3

தமிழகத்தில் தங்கத்தின் விலை நேற்று (ஏப்ரல் 02) யாரும் எதிர்பார்க்காத வகையில் 2வது முறையாகப் பெருமளவு சரிவைச் சந்தித்துள்ளது.

நேற்று காலையில் சவரனுக்கு ரூ.800 குறைந்த நிலையில், தற்போது மாலையில் மேலும் ரூ.1,600 குறைந்து, ஒட்டு மொத்தமாக ஒரே நாளில் சவரனுக்கு ரூ.2,400 அதிரடியாகச் சரிந்துள்ளது. இந்தத் திடீர் விலை வீழ்ச்சி நகை வாங்குவோரிடையே பெரும் உற்சாகத்தையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

விலை நிலவரத்தின்படி, நேற்று காலையில் ஒரு சவரன் தங்கம் ரூ.1,11,600 க்கு விற்பனை செய்யப் பட்டது. தற்போது மேலும் சரிவடைந்து ஒரு சவரன் ரூ.1,10,000 என்ற நிலைக்கு வந்துள்ளது. அதே போல், ஒரு கிராம் தங்கத்தின் விலை காலையில் ரூ.100 குறைந்த நிலையில், தற்போது மேலும் ரூ.200 குறைந்து ரூ.13,750க்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று சவரன் ரூ.1,12,400 என்ற உச்சத்தில் இருந்த நிலையில், நேற்று ஒரே நாளில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் சந்தையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளி விலையைப் பொறுத்தவரை பெரிய மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.255க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2,55,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது. சர்வதேசச் சந்தையில் நிலவும் பொருளாதார மாற்றங்கள் மற்றும் கச்சா எண்ணெய் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் தங்கம் விலை கடந்த சில நாட்களாக உச்சத்தில் இருந்தது.

ஆனால், நேற்று ஏற்பட்டுள்ள இந்த மெகா சரிவு சாமானிய மக்களுக்குப் பெரும் நிம்மதியை அளித்துள்ளது. திருமண சீசன் தொடங்கி உள்ள நிலையில், இந்த விலை குறைவு நகைக்கடைகளில் கூட்டத்தை அதிகரிக்கச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலைய வளாகத்தில்

# 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் 'என் வாழ்க்கை என் கடமை' என்ற வாசகம் அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்களை பேருந்துகளில் ஒட்டி கலெக்டர் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்

மதுரை, ஏப். 03– தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 மாவட்ட தே ர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலைய வளாகத்தில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மாணவ, மாணவிகள் மற்றும் முதல் முறை வாக்காளர்களுக்கு தேர்தல் மாதிரி வாக்குப்பதிவு இயந்திரத்தின் (EVM) பயன்பாடு குறித்து விளக்கினார். மேலும், 100% வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் "என் வாழ்க்கை என் கடமை" என்ற வாசகம் அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்களை பேருந்துகளில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் மாணவர்கள் நடனம் மூலம் 100% வாக்குப்பதிவின் அவசியத்தை பொது மக்களுக்கு எடுத்துரைத்தனர். மேலும், உணவு டெலிவரி செய்யும் பணியாளர்களுக்கு 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வாசகம் கொண்ட டிஷர்ட்கள் வழங்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையின் ஒரு பகுதியாக "சபாநாயகி" (Sabhanayagi) எனும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தேர்தல் தகவல் சாட்பாட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சாட்பாட், SVEEP (Systematic Voters Education and Electoral Participation) திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, மாவட்டத்தின் CloudFront இணைய இணைப்பின் மூலம் பொதுமக்கள் அனைவரும் இலவசமாக 24 மணி நேரமும், வாரத்தின் அனைத்து நாட்களிலும் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சேவை வழங்கும் இச்சாட்பாட், வாக்காளர்களுக்கு துல்லியமான மற்றும் அதிகாரப்பூர்வமான தேர்தல் தகவல்களை உடனுக்குடன் வழங்கும். "சபாநாயகி" சாட்பாட் மூலம் 1.வாக்காளர்பதிவு செய்வது தொடர்பான நடைமுறைகள் மற்றும் தேவையான ஆவணங்கள், 2.வாக்குச்சாவடி அமைவிடம் மற்றும் Voter Assistance Booth (VAB) வசதிகள், 3. மாதிரி நடத்தை விதிமுறைகள் (Model Code of Conduct), மௌன காலம், cVIGIL பயன்பாடு, 4.EVM மற்றும் VVPAT இயந்திரங்களின் செயல்முறை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள், 5.NOTA (None of the Above) குறித்த தகவல்கள், 6. 80 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வீட்டு வாக்குப்பதிவு வசதி, 7.மாற்றுத்திறனாளிகளுக்கான Assured Minimum Facilities (AMF) மற்றும் அணுகல் வசதிகள், 8.வேட்பாளர் தகுதி, மனு தாக்கல், வைப்பு தொகை மற்றும் செலவுக் கட்டுப்பாடுகள், 9.புகார் அளிக்கும் முறைகள் – cVIGIL, 1950 மற்றும் National Grievances Redressal System (NGRS), 10.EPIC, eEPIC மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மாற்று அடையாள ஆவணங்கள், 11. மதுரை மாவட்ட தேர்தல் அட்டவணை மற்றும் தொகுதி விவரங்கள் போன்ற தகவல்கள் பெற முடியும். இந்த சாட்பாட், தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகள் மற்றும் சட்ட அடிப்படைகளை பொதுமக்களுக்கு எளிதில் புரியும் வகையில் வழங்கி, தகவல் இடைவெளியை குறைக்கும் முக்கிய கருவியாக செயல்படும். எனவே மதுரை மாவட்ட




தேர்தல் அலுவலகம், அனைத்து வாக்காளர்களும் "சபாநாயகி" சாட்பாட்டை என்ற (https://d3i7k55s5oinbg.cloudfront.net/) லிங்க்ஐ பயன்படுத்தி தேர்தல் தொடர்பான தகவல்களை அறிந்து, விழிப்புணர்வுடன் மற்றும் பொறுப்புடன் வாக்களிக்குமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அவனியாபுரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் முன்னேற்பாடு, பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதனைத்தொடர்ந்து அவனியாபுரம், கூடக்கோயில் நாச்சியப்ப நாடார் குருவம்மாள் மெட்ரிகுலேஷன் பள்ளியில் உள்ள அதிக வாக்குச்சாவடிகள் அமைத்துள்ள மையத்தில் முன்னேற்பாடு, பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். பின்னர் வில்லாபுரம் ஸ்ரீதுர்காமெட்ரிகுலேஷன் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் கடந்த தேர்தலில் குறைவான வாக்குப்பதிவை தொடர்ந்து ஆய்வு செய்து பார்வையிட்டதுடன், வில்லாபுரம் ஸ்ரீ துர்கா மெட்ரிகுலேஷன் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் கடந்த தேர்தலில் குறைவான வாக்குப்பதிவை தொடர்ந்து அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் வாக்குச்சாவடியில் ஏதேனும் குறைகள் இருக்கிறதா என கேட்டறிந்து வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தொடர்ந்து திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனுப்பானடி ஏபிடி துரைராஜ் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் முன்னேற்பாடு, பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) வானதி, வருவாய் கோட்டாட்சியர், மதுரை கருணாகரன், உதவி இயக்குநர் (பயிற்சி) ஜனனி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பங்குனி உத்திரத்திருவிழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், பங்குனி உத்திரத் திருத்தேரினை வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர் செ.மாரிமுத்து உட்பட பலர் உள்ளனர்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில்

# 100 சதவீதம் வாக்குப்பதிவு இலக்கை அடையும் நோக்கத்தில் வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு

திருவண்ணாமலை, ஏப். 03– திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஆரணி எஸ்.எஸ்.எஸ் மகளிர் கல்லூரியில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், தலைமையில் (0104.2026) அன்று ஆரணி வட்டம். ஆகாரம் எஸ்.எஸ்.எஸ் மகளிர் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெவுள்ளதை முன்னிட்டு 100% வாக்குப்பதிவு இலக்கை அடையும் நோக்கத்தில் வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு 100% ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், ஆகாரம் எஸ்.எஸ்.எஸ் மகளிர் கல்லூரியில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்



சித்தலைவர் தலைமையில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 100% வாக்குப்பதிவு இலக்கை அடையும் நோக்கத்தில் வாக்காளர் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட புகைப்பட மையத்தில் புகைப்படம் எடுத்துக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் மாவட்ட தேர்தல் அலுலவர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் கல்லூரி மாணவிகள் கீழ்கண்ட வாக்காளர் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்.

மக்களாட்சியின் மீது பற்றுடைய இந்தியக் குடிமக்களாகிய நாம், நம்முடைய நலன் கருதும் மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் மாண்பையும் நிலைநிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும் மதம், இனம், சாதி வகுப்பு. மொழி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு ஆட்படாமலும் அல்லது எந்தவொரு தூண்டுத லுமின்றியும் வாக்களிப்போம் என்றும் உறுதி மொழிகிறோம் என்ற வாக்காளர் உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மகளிர் சுயஉதவி குழுக்களின் மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை ஆட்டோக்களில் ஒட்டி பொதுமக்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் வாக்காளர்கையெழுத்து இயக்கத்தை கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ம.சுதாகர். மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், ஆரணி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் சிவா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) தனபதி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆரணி வட்டாட்சியர் அகதீஸ்வரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பருத்திவிளை பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈட்டுபட்டுவருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை மேல கைலாசபுரம் இந்து நாடார் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ காளியம்மன் ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில் மூல பதினெண் சித்தர்கள் அருளிய எண் பிணைப்பு திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவை முன்னிட்டு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலை பூஜையுடன் கணபதி ஹோமம் துவங்கியது. இதில் விழா குழுவினர்கள் நிர்வாக குழுவினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது முக்கிய நிகழ்வான கும்பாபிஷேகப் பெருவிழா வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது இதற்கான ஏற்பாடுகளில் விழா குழுவினர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர். அதனைத் தொடர்ந்து மதுரை மாநகர் கே டி கே தங்கமணி நகர் 8வது தெரு பாக்கியநாதபுரம் தத்தனேரியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா கும்பமுனி ஸ்ரீ அகஸ்தியர் சீடர் ஸ்ரீ லால் ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகள் திருக்கோவில் மகா அஷ்டபந்தன கும்பாபிஷேக விழாவினை முன்னிட்டு யாகசாலை பூஜையுடன் கணபதி ஹோமம் நடைபெற்றது.இதில் ஆலோசகர் செல்லூர் ஓம் பசி ஸ்ரீ பாம்பாட்டி சித்தர் பீடம் சோமசுந்தரம், கணபதி மற்றும் பக்தர்கள் விழா குழுவினர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் எரிவாயு உருளை (Cylinder) பயன்பாடு தொடர்பாக உணவக உரிமையாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான்,தலைமையில் (02.04.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ் உட்பட பலர் உள்ளனர்.

# கீழடியில் இரண்டு அடுக்குகள் கொண்ட செங்கல் கட்டுமானம் கண்டெடுப்பு



சிவகங்கை,ஏப். 03– சிவகங்கை மாவட்டம், கீழடியில் 11ஆம் கட்ட அகழாய்வு பணிகள் மார்ச் 18 முதல் நடந்து வருகின்றன கீழடியில் கஜேந்திரன் என்பவரது ஒன்றரை ஏக்கர் நிலத்தில் எட்டு குழிகள் தோண்ட திட்டமிடப்பட்டு முதல் கட்டமாக எதிரெதிரே உள்ள இரண்டு குழிகள் தோண்டப்பட்டு பணிகள் நடக்கின்றன.

ஒரு குழியில் இரண்டரை அடி ஆழத்தில் ஒரே இடத்தில் குவியலாக ஐந்திற்கும் மேற்பட்ட சுடு மண் கிண்ணங்கள் கண்டறியப்பட்டன. இதுதவிர கிண்ணங்களின் அருகிலேயே சிறிய அளவிலான சுடுமண் பானைகளின் ஒரு பகுதியும் வெளிப்பட்டிருந்தது . மற்றொரு குழியில் மூன்றரை அடி ஆழத்தில் இரண்டு அடுக்குகள் கொண்ட செங்கல் கட்டுமானம் வெளிப்பட்டுள்ளது.

செங்கல் கட்டுமானத்தில் ஒரே அளவிலான செங்கற்கள் இன்றி வேறு வேறு வடிவங்களை கொண்டு கட்டப்பட்டுள்ளது. செங்கல் கட்டுமானத்தின் அருகிலேயே துளையுடன் கூடிய கூரை ஓடும் கிடைத்துள்ளது. செங்கல் கட்டுமானம் முழுவதுமாக வெளிப்பட்டால் மட்டுமே அதன் பயன்பாடு தெரிய வரும். எனவே இது கட்டுமானத்தின் மீதியாக இருக்க வாய்ப்புள்ளது. மேலும் குழிகளில் சிதிலமடைந்த செங்கற்கள், பானை ஓடுகள் உள்ளிட்டவைகளும் வெளிப்பட்டு வருகின்றன.




மாவட்டஆட்சியர்அலுவலகபெருந்திட்டவளாகத்தில்,மாற்றுத்திறனாளிகள்நலத்துறை சார்பில்"உலகஆட்டிசம்"நாளையொட்டிஉலகபுறவுலகசிந்தனையற்யோர்விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், தலைமையில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் ஆட்டிசம் பாதித்த குழந்தைகளுடன் கேக்கினை வெட்டி அனைவருக்கும் பகிர்ந்தளித்தார். உடன் மாவட்ட மாற்றுதிறனாளி நல அலுவலர் எஸ். குமார், மாநில மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் நாகராணி, ஆட்டிசம் பாதித்த குழந்தைகள், குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# 100 சதவீதம் வாக்களிக்களிக்கும் வகையில் வாக்காளர் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்

## கள்ளக்குறிச்சி கலெக்டர் தகவல்

கள்ளக்குறிச்சி, ஏப்.02– கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டாரம், ஏர்வாய்பட்டினம் மற்றும் கல்லாநத்தம் ஆகிய கிராமங்களில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி வாக்காளர்விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 01.04.2026 அன்று நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.



அந்த வகையில் சின்ன சேலம் வட்டாரம், ஏர் வாய்பட்டினம் மற்றும் கல்லாநத்தம் ஆகிய கிராமங்களில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அனைத்து வாக்காளர்களும் 100 சதவீதம் வாக்களிக்கும் வகையில் வாக்காளர் உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

எனவே "வாக்களிப்பது நமது உரிமை மற்றும் கடமை, 100 சதவீதம் வாக்களிப்பீர்" என்பதை உணர்ந்து நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்து தங்களது ஜனநாயகக் கடமையினை நிறைவேற்ற வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்தார்.



திருவண்ணாமலைசட்டமன்றம்பாரதியஜனதாகட்சியின்தேர்தலுக்கானஆலோசனைக் கூட்டம்திருவண்ணாமலை தெற்கு மாவட்ட பாரதிய ஜனதாகட்சி அலுவலகத்தில் மாவட்ட தலைவர் கே ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மேலிட பொறுப்பாளர் ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் ரெட்டி, மற்றும் நீலகண்டா மற்றும் பெருங்கோட்ட, அமைப்பு செயலாளர் குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு தேர்தலுக்கு செய்ய வேண்டிய பணிகள் குறித்து விரிவான ஆலோசனை தொகுதிக்கு உட்பட்டமுக்கியநிர்வாகிகளுக்குஆலோசனைவழங்கப்பட்டதுஇந்நிகழ்ச்சியில்முன்னாள் மாவட்ட தலைவர் ஜீவானந்தம் சட்டமன்ற பொறுப்பாளர் அறவாழி, சட்டமன்ற இணை பொறுப்பாளர் கருணாகரன், மாவட்ட பொதுச் செயலாளர் ஜெய்நாத் ,கவிதா பிரதீஸ் ,மாவட்ட துணைத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி, சஞ்சீவி பழனி, பட்டியல் அணி மாநில செயற்கு உறுப்பினர் விஜயராஜ் ராஜதமயந்தி மற்றும் மாநில மாவட்ட பிரிவு அணி மாவட்ட தலைவர்கள் மண்டல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772026,9443699066